# நமது தின கனி


காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol : 01 | Issue : 123 | 4 Pages | 06.12.2023 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 123 | 4 பக்கங்கள் | 06.12.2023 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## ராஜஸ்தான் முதலமைச்சர் யார்?: பா.ஜனதா உயர்மட்ட குழு இறுதி முடிவு



ராஜஸ்தான், டிச.6

ராஜஸ்தானில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் காங்கிரசை வீழ்த்தி பா.ஜ.க. அமோக வெற்றி பெற்றுள்ளது. அம்மாநிலத்தில் புதிய முதல் மந்திரியை தேர்வு செய்வதில் பாரதிய ஜனதா தீவிரம் காட்டி வருகிறது. தேர்தல் பிரசாரத்தின்போது முதல்மந்திரியாக யாரும் முன்னிறுத்தப்படவில்லை.

இந்நிலையில் தேர்தலில் அபார வெற்றி பெற்று கொண்டாட்டங்கள் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து புதிய முதல்மந்திரியாக யாரை தேர்ந்தெடுப்பது என்பது பற்றி கட்சியின் உயர்மட்ட குழு ஆலோசனை நடத்தி வருகிறது.

முன்னாள் முதல்மந்திரி வசுந்தரா ராஜே, முன்னாள் ஜெய்ப்பூர் அரச குடும்பத்தை சேர்ந்த தியா குமாரி,

எம்.பி. பாபா பாலக்நாத், மத்திய மந்திரி கஜேந்திர சகாவாத் ஆகியோர் முதல்மந்திரி பதவிக்கான பரிசீலனையில் உள்ளனர்.

இந்நிலையில் கோபிசந்த் மீனா, சங்கர் சிங் ராவத் உள்பட 20க்கும் மேற்பட்ட பா.ஜனதா எம்.எல்.ஏ.க்கள் வசுந்தரா ராஜேவின் வீட்டிற்கு சென்றுள்ளனர். அவர்கள் முதல்மந்திரியாக வசுந்தரா ராஜேவுக்கு ஆதரவு தெரிவிப்பதாக கூறப்படுகிறது.

இதுவரை முதல் மந்திரியை கட்சி தலைமை தேர்வு செய்யவில்லை. இந்நிலையில் வசுந்தரா ராஜே வீட்டுக்கு சென்ற 20 எம்.எல்.ஏ.க்களும் டெல்லி சென்று மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவையும் சந்தித்துள்ளனர்.


இதுகுறித்து பா.ஜ.க. எம்.எல்.ஏ. சுரேஷ் ராவத் கூறுகையில், வசுந்தரா ராஜே தனது பதவி காலத்தில் முதல்மந்திரியாக சிறப்பாக செயல்பட்டார் என்றார்.

இதற்கிடையே ராஜஸ்தான் பா.ஜ.க. தலைவர் சிபி ஜோஷியை தேர்தல் பொறுப்பாளராக இருந்த அருண் சிங் சந்தித்து ஆலோசனை நடத்தினார். அப்போது முதலமைச்சர் பதவி குறித்து கேட்டபோது, "முதலமைச்சர் யார் என்பதை உயர்மட்ட குழு முடிவு செய்யும். அதை அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள்" என்றார்.

புதிய முதல்மந்திரி யார்? என்பது குறித்து பா.ஜ.க. தலைமை இன்று அறிவிப்பு வெளியிடும் என தகவல்கள் வெளியாகி உள்ளன

........................................


## ராஜஸ்தான் முதலமைச்சர் யார்?: பா.ஜனதா உயர்மட்ட குழு இறுதி முடிவு

திருவனந்தபுரம், டிச.6

மண்டலமற்றும்மகரவிளக்குபூஜைக்காகசபரிமலைஐயப்பன்கோவில் நடை கடந்தமாதம் 16ந்தேதி திறக்கப்பட்டது. மறுநாள் 17ந்தேதி (கார்த்திகை 1) முதல் பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகிறார்கள்.

சாமிதரிசனம்செய்யதினமும்ஆயிரக்கணக்கானபக்தர்கள்சபரிமலையில் திரண்டவண்ணம் உள்ளனர். ஆன்லைன் மூலம் ஆயிரக்கணக்கானோர் முன்பதிவு செய்து தரிசனம் செய்து வரும் நிலையில், உடனடி முன்பதிவு மையங்களிலும்ஏராளமானோர்பதிவுசெய்துசாமிதரிசனம்செய்கின்றனர்.

தற்போது பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய 17 மணி நேரம் அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள். இருந்த போதிலும் பக்தர்கள் வருகை மிகவும் அதிகமாக இருப்பதால், சாமி தரிசனம் செய்ய பக்தர்கள் பல மணி நேரம் காத்திருக்கும் நிலை நிலவி வருகிறது.

நேற்று சாமி தரிசனத்துக்கு 89 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் முன்பதிவு செய்திருந்த நிலையில், 70 ஆயிரம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். இன்று (செவ்வாய்க்கிழமை) சாமி தரிசனம் செய்ய 60 ஆயிரம் பேர் முன்பதிவு செய்திருக்கிறார்கள்.

சாமி தரிசனத்துக்கு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் உடனடி முன்பதிவு செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு தகுந்தாற்போல் அனைத்து முன்னேற்பாடு நடவடிக்கைகளும் செய்யப்பட்டு இருக்கிறது. பக்தர்கள் வருகை நாளுக்குநாள் அதிகரித்து வருவதால், அவர்கள் சிரமமின்றி சாமி தரிசனம் செய்ய தேவசம்போர்டு பல்வேறு ஏற்பாடுகளை செய்து வருகிறது.

அதன்படி திருப்பதி கோவிலை போன்று சபரிமலையில் வரிசை முறையை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. அந்த முறை சோதனை முறையில் செயல்படுத்தி பார்க்கப்பட்டது. அதன்படி மரக்கூட்டம் மற்றும் சரம்குத்தி இடையே மூன்று வரிசை வளாகங்கள் பயன்படுத்தப்பட்டன.

அந்த வரிசைகளில் பக்தர்கள் வரிசையாக ஒழுங்குபடுத்தி நிறுத்தப்பட்டனர். பின்பு அந்த வரிசைகளின்படி பக்தர்கள் வருவதற்கான உத்தரவு சன்னிதானத்தில் இருந்து போலீசார் மூலம் பிறப்பிக்கப்பட்டது. அதன்பிறகு அந்த வழிகள் திறக்கப்பட்டு பக்தர்கள் செல்ல அனுமதிக்கப்பட்ட னர்.

இந்த வரிசை முறை வெற்றி பெற்றுள்ளதாகவும், பக்தர்கள் கூட்டம் மிகவும் அதிகமாக உள்ள நாட்கள் மற்றும் நேரங்களில் இந்தமுறை அமல்படுத்தப்படும் என்றும் தேவசம்போர்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த வரிசை முறையால் சாமி தரிசனம் செய்ய பக்தர்கள் காத்திருக்கும் நேரம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அனைவரும் இணைந்து பணியாற்றி இயற்கை இடர்ச்சூழலை வெல்வோம்: மு.க.ஸ்டாலின்

சென்னை, டிச.6

அனைவரும் இணைந்து பணியாற்றி இயற்கை இடர்ச்சூழலை வெல்வோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில், அனைத்து இடங்களிலும்நீர்வடிந்து, இயல்பு நிலை திரும்ப மேலும் சில காலம் தேவைப்பட்டாலும், அதற்கான முயற்சிகளை உடனடியாக மேற்கொள்ள வெளிமாவட்டங்களில் இருந்து வந்திருக்கும் பணியாளர்கள், அனைத்து அரசு உயர் அலுவலர்கள்,

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அனைவருக்கும் உத்தரவிட்டுள்ளேன். இந்தப் பணிகள் அனைத்தையும் நானே நேரடியாகக் கண்காணித்து வருகின்றேன்.

இந்த இக்கட்டான காலகட்டத்தில் அனைவரும் இணைந்து பணியாற்றி இந்த இயற்கை இடர்ச்சூழலை வென்று வருவோம் என்று தெரிவித்துள்ளார்.



# 7–ம் ஆண்டு நினைவு தினம்: ஜெயலலிதா நினைவிடத்தில் எடப்பாடி பழனிசாமி மரியாதை

சென்னை, டிச.6

மறைந்த அ.தி.மு.க. பொதுச்செயலாளர், முன்னாள் முதல்அமைச்சர் ஜெயலலிதாவின் 7ம் ஆண்டு நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது. இதையொட்டி எதிர்க்கட்சித் தலைவரான அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அடையாறில் உள்ள தனது வீட்டில் உள்ள ஜெயலலிதாவின் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அதன் பிறகு மெரினா கடற்கரையில் உள்ள ஜெயலலிதாவின் நினைவிடத்துக்கும் சென்று மலர் வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். அவருடன் அவைத் தலைவர் தமிழ் மகன் உசேன், முன்னாள் அமைச்சர்கள் கே.பி.முனுசாமி, திண்டுக்கல் சீனிவாசன், டி.ஜெயக்குமார், நத்தம் விசுவநாதன், எஸ்.பி.வேலுமணி, தங்கமணி, கே.பி. அன்பழகன், ஆர்.பி.உதயகுமார், ரமணா, வளர்மதி, கோகுல இந்திரா, கடம்பூர் ராஜூ, டி.கே.எம். சின்னையா, மாதவரம் மூர்த்தி, கமலக் கண்ணன்.



மாவட்டச் செயலாளர்கள் தி.நகர் சத்யா, வெங்க டேஷ்பாபு, வேளச்சேரி அசோக், விருகை ரவி, சிட்லபாக்கம் ராஜேந்திரன், ஆர்.ஜே.ராஜேஷ், கே.பி.கந்தன், வாலாஜாபாத் கணே சன் மற்றும் பெரும்பாக்கம் ராஜசேகர், துரைப் பாக்கம் டி.சி.கோவிந்தசாமி, கழக மாணவரணி துணைச் செயலாளர் வக்கீல் ஆ.பழனி, இளைஞரணி இணைச் செயலாளர் டாக்டர் வி.சுனில், வடபழனி சத்திய நாராயண மூர்த்தி உள்பட ஏராளமான கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக வந்து ஜெயலலிதா நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்கள். பின்னர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நிர்வாகிகள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அம்மாவின் வழியில் மக்களால், மக்களுக்காக என்றென்றும் பயணிப்போம். அம்மா நூற்றாண்டு கனவை நெஞ்சில் நிலை நிறுத்தி மக்களுக்கான ஒரே இயக்கம் அ.இ.அ.தி.மு.க. என்பதை நம் செயலில் உறுதிப்படுத்துவோம் என்றும் மக்கள் பணியே மகேசன் பணியாகக் கொண்டு அயராது உழைப்போம். பொய்யான வாக்குறுதிகளை தந்து மக்களை ஏமாற்றியே போட்டோவுக்கு மட்டும் போஸ் கொடுக்கும் பொம்மை முதல்அமைச்சர் ஆட்சிக்கு முடிவு கட்டுவோம். முடிவு கட்டுவோம் என்றும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

# திருப்பூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் தொழிற் பழகுநர் (அப்ரண்டிஸ்) சேர்க்கை முகாம்: கலெக்டர் தகவல்

திருப்பூர், டிச.6

பிரதம மந்திரி தேசிய தொழிற் பழகுநர்சேர்க்கைமுகாம்தொழில் பழகுநர் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மற்றும் மத்திய அரசின் பொது பயிற்சி இயக்ககம் (னுபுவு) இணைந்து நடத்தும் திருப்பூர் மாவட்ட அளவில் தொழில் பழகுநர்களுக்கான அப்ரண்டிஸ் சேர்க்கை முகாம் திருப்பூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய வளாகத்தில் 11.12.2023 அன்று காலை 09.00 மணிமுதல் மாலை 05.00 மணிவரையில் நடைபெற உள்ளது.

இம் முகாமில் மத்திய / மாநில அரசு நிறுவனங்கள் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் கோயம்புத்தூர் /திருப்பூர் /ஈரோடு ஆகிய மாவட்டங்களில் உள்ள தனியார் துறை நிறுவனங்களும் பங்கேற்று தங்கள் நிறுவனங்களில் உள்ள காலியிடங்களைநிரப்ப உள்ளனர்.

இதில் பங்கேற்று தேர்வு பெற்றவர்களுக்கு தொழில் பழகுநர் பயிற்சி அளிக்கப்பட்டு மத்திய அரசின் தேசிய தொழில் பழகுநர் சான்றிதழ் (யுஊ) வழங்கப்படும். தேசிய தொழில் பழகுநர் சான்றிதழ் பெற்றவர்களுக்கு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலையில் முன்னுரிமை வழங்கப்படும். மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் யுஊ பெற்றவர்களுக்கு முன்னுரிமை கிடைக்கிறது.

தொழில் பழகுநர்களுக்கான உதவித்தொகை தொழில் பிரிவுகளுக்கு ஏற்ப கிடைக்கும். அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் திட்டத்தின் கீழ் தொழில் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் அடிப்படை பயிற்சியுடன் வேலைவாய்ப்பு பெறவிருப்பமுள்ள 8/10/11 மற்றும் 12ம் வகுப்பு முடித்த தகுதி வாய்ந்தவர்கள் உரிய அசல் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களுடன் பங்கேற்கலாம். மேலும் விபரங்கள் அறியும் பொருட்டு பயிற்சியாளர்கள் மற்றும் நிறுவனங்கள் மாவட்ட உதவி இயக்குநர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், எண்: 1152வது தளம், காமாட்சியம்மன் கோவில் வீதி, பழைய பேருந்து நிலையம் பின்புறம், திருப்பூர் அவர்களையும், இம்மாவட்டத்தில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்கள் திருப்பூர், தாராபுரம் மற்றும் உடுமலைப்பேட்டை அவர்களையும் நேரிலும் மற்றும் தொலைபேசி எண்கள் (9499055695 / 04212230500/ 9894783226 / 9499055700 / 9499055696) வாயிலாகவும் தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.



கலெக்டர்கிறிஸ்துராஜ்திருப்பூர்மாநகராட்சி15வேலம்பாளையம்மாநகராட்சிநடுநிலைப்பள்ளியில் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு நிகழ்வில் கலந்து கொண்டு மாற்றுத்திறன் குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையில் வாழ்த்துரை வழங்கினார். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கீதா உள்ளார்.

# 2வது நாளாக எக்ஸ்பிரஸ் ரெயில்கள் ரத்து: சென்ட்ரல், எழும்பூர் நிலையத்தில் காத்து கிடக்கும் வடமாநில பயணிகள்

சென்னை, டிச.6

சென்னையில் பெய்த அதிகன மழையால் தண்டவாளம் மற்றும் ரெயில்வே பாலத்தில் தேங்கிய மழை வெள்ளம் மெதுவாக வடிந்து வருகிறது. இதனால் எக்ஸ்பிரஸ் ரெயில்கள் இன்று 2வது நாளாக ரத்து செய்யப்பட்டுள்ளன. சில ரெயில்கள் விழுப்புரத்தில் இருந்து இயக்கப்படுகிறது.

சில ரெயில்கள் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டுள்ளது. பயணிகள் பாதுகாப்பு கருதி தெற்கு ரெயில்வே இந்த மாற்றங்களை செய்துள்ளது.

எண். 22637 சென்ட்ரல் மங்களூரு எக்ஸ்பிரஸ், எண். 16116 புதுச்சேரி எழும்பூர், எண். 06028 விழுப்புரம் தாம்பரம், எண். 12664 திருச்சி ஹவுரா ஆகிய ரெயில்கள் இன்று முழுமையாக ரத்து செய்யப்பட்டன.

எண். 06059 கோவை பாராயுனி, எண். 06034



வேலூர்சென்னை கடற்கரை, எண். 16054 திருப்பதி சென்ட்ரல் ரெயில்கள் முழுமையாக ரத்து செய்யப்பட்டன.

சென்ட்ரல் மும்பை லோக்மன்யா எக்ஸ்பிரஸ் சென்ட்ரல் மற்றும் ரேணிகுண்டா இடையே ரத்து செய்யப்பட்டுள்ளன.

சென்ட்ரல்மும்பைசத்திரபதி நிலையத்திற்கு புறப்பட்டு செல்லும் எக்ஸ்பிரஸ்சென்ட்ரல் ரேணிகுணிடா இடையே ரத்து செய்யப்பட்டு ரேணி குண்டாவில் பிற்பகல் 3.55 மணிக்கு புறப்பட்டன.

இதே போல எழும்பூர் குருவாயூர் எக்ஸ்பிரஸ், எழும்பூர் விழுப்புரம் இடையே ரத்து செய்யப்பட்டுள்ளது. விழுப்புரத்தில் இருந்து புறப்பட்டு சென்றது. மதுரை பாண்டியன் எக்ஸ்பிரசும் ரத்து செய்யப்பட்டு விழுப்புரத்தில் இருந்து இரவு 9.40 மணிக்கு செல்லும்.

எழும்பூர் மங்களூரு எக்ஸ்பிரஸ் எழும்பூர் விழுப்புரம் இடையே ரத்து செய்யப்பட்டுள்ளது. இந்த ரெயில் அதிகாலை 1.37 மணிக்கு விழுப்பு ரத்தில் இருந்து புறப்பட்டு செல்லும். சென்ட்ரல் பெங்களூர் லால்பார்க் எக்ஸ்பிரஸ் பகல் 3.30 மணிக்கு பதிலாக மாலை 5.30 மணிக்கு புறப்பட்டு செல்லும்.

சென்ட்ரல் மைசூர் எக்ஸ்பிரஸ் தாமதமாக பிற்பகல் 3.45 மணிக்கு புறப்பட்டு சென்றது. சென்ட்ரல் ஜோலார் பேட்டை ஏலகிரி எக்ஸ்பிரஸ் இன்று மாலை 5.55 மணிக்கு புறப்படுவதற்கு பதிலாக அரக்கோணத்தில் இருந்து இரவு 7.05 மணிக்கு புறப்பட்ட செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்ட்ரல், எழும்பூரில் இருந்து ரெயில்கள் ரத்து மற்றும் வேறு இடங்களில் இருந்து புறப்பட்டு செல்வதால் பயணிகள் சிரமத்துக்கு ஆளானார்கள். குறிப்பாக வட மாநில பயணிகள் காத்து கிடந்தனர்.

# சென்னை–நெல்லூர் சாலையில் கடும் வெள்ளம்: 4 அடி உயரம் தண்ணீர் செல்வதால் போக்குவரத்து முடக்கம்


திருப்பதி, டிச.6

ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டத்தில் மிச்சாங் புயல் காரணமாக கடந்த 2 நாட்களாக கன மழை பெய்தது. இதனால் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கடும் வெள்ளம் சென்னைநெல்லூர் தேசிய நெடுஞ்சாலையில் பல பகுதிகள் நீரில் மூழ்கியது.

திருப்பதி மாவட்டம் சூலூர்பேட்டை அருகே உள்ள கோகுல் கிருஷ்ணா என்ஜினியரிங் கல்லூரி அருகே தேசிய நெடுஞ்சாலையில் 4 அடி உயரத்துக்கு வெள்ளநீர் செல்கிறது. மேலும் சூலூர்பேட்டை சுங்கச்சாவடி அருகே உள்ள கலங்கிய





ஆற்றில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் வெள்ளம் தேசிய நெடுஞ்சாலையில் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த வெள்ளத்தின் காரணமாக சென்னை நெல்லூர் இடையே போக்குவரத்து துண்டிக்கப்ப ட்டது. இதனை தொடர்ந்து போலீசார் சாலையில் இருபுறமும் நின்று வாகனங்களை தடுத்து நிறுத்தினர்.

நெடுஞ்சாலையில் வாகனங்கள் நிறுத்தப்பட்டதால் போக்குவரத்து முடங்கியது.

அனைத்து வாகனங்களும் சூலூர்பேட்டை சுங்கச்சாவடியில் இருந்து திருப்பி விடப்பட்டன.

தேசிய நெடுஞ்சாலையின் ஓரத்தில் உள்ள பல ஓடைகள் நிரம்பி, அருகில் உள்ள கிராமங்களை மூழ்கடித்தன. பல இடங்களில் தாழ்வான பாலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சென்னைநெல்லூர் சாலையில் போக்குவரத்து துண்டிக்கப்ப ட்டுள்ளதால் வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி விடப்படுகின்றன.

இந்த வழியாக யாரும் பயணம் செய்ய வேண்டாம் என திருப்பதி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பரமேஸ்வர் தெரிவித்துள்ளார்.

# ரூ.5 கோடி மதிப்பிலான ஆக்கிரமிப்பு நிலம் மீட்பு

தருமபுரி, டிச.6

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு தக்காளி மண்டி பின்புறம் பேரூராட்சிக்கு சொந்தமான சுமார் ரூ. 5 கோடி மதிப்பிலான இடத்தை கடந்த 30 ஆண்டுகளாக தனிநபர்கள் சிலர் ஆக்கிரமித்து வீடு கட்டி வசித்து வந்தனர். ஆக்கிரமிப்பு இடத்தை மீட்க பேரூராட்சி நிர்வாகம் முயற்சி செய்த போது ஆக்கிரமிப்பாளர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். இந்த வழக்கின் தீர்ப்பில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தை ஆக்கிரமிப்பாளர்கள் காலி செய்ய வேண்டும் என சென்னை உயர் நீதிமன்ற உத்தரவிட்டது. அதனை தொடர்ந்து 15 நாட்களுக்குள் தாமதிக்காமல் வீட்டை காலி செய்து இடத்தை பேரூராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும், தவறினால் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி பேரூராட்சி நிர்வாகம் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு பேரூராட்சி க்கு சொந்தமான இடம் மீட்கப்படும் என்ற அறிவிப்பு நோட்டிஸ் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் பேரூராட்சி செயல் அலுவலர் டார்த்தி முன்னிலையில் பேரூராட்சி அதிகாரிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட 9 வீடுகளிலும் குடியிருப்பவர்களுக்கு அறிவிப்பு நோட்டீஸ் வழங்கி கையெழுத்து பெற்றனர்.

மேலும் அறிவிப்பு வீட்டு கதவிலும் ஒட்டினர். ஆனால் அறிவிப்பு விடுத்து 3 மாதங்களாகியும் வீட்டை காலி செய்யாததால் மாவட்ட ஆட்சியர் சாந்தி உடனடியாக நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற பாலக்கோடு பேரூராட்சி நிர்வாகத்திற்க்கு உத்தரவிட்டார். அதனை தொடர்ந்து பேரூராட்சி அதிகாரிகள் மற்றும் வருவாய் துறையினர் ஜே.சி.பி மூலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அனைத்து வீடுகளையும் இடித்து பேரூராட்சிக்கு சொந்தமான சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பிலான ஆக்கிரமிப்பு நிலத்தை மீட்டனர். அது சமயம் பாதுகாப்பு பணியில் பாலக்கோடு போலீசார் மற்றும் தீயணைப்பு போலீசார் என 30க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# கொடி, பிரதமர், அரசியலமைப்பு ஆகியவற்றில் இரண்டு எப்படி இருக்க முடியும்: ஜம்முகாஷ்மீர் மசோதா விவாதத்தில் அமித்ஷா பேச்சு

ஜம்முகாஷ்மீர், டிச.6

மக்களவையில் ஜம்முகாஷ்மீர் இட ஒதுக்கீடு, ஜம்முகாஷ்மீர் மறுசீரமைப்பு (திருத்த மசோதா) ஆகிய மசோதா மீது விவாதம் நடைபெற்றது.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சி எம்.பி. சவுகாதா ராய் சில கருத்துக்களை தெரிவித்தார்.

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. இன்று காலை இந்திய நாட்டின் பொருளாதார சூழ்நிலை என்ற தலைப்பில் விவாதம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து மக்களவையில் ஜம்முகாஷ்மீர் இட ஒதுக்கீடு, ஜம்முகாஷ்மீர் மறுசீரமைப்பு (திருத்த மசோதா) ஆகிய மசோதா



மீது விவாதம் நடைபெறுகிறது. அப்போது திரிணாமுல் காங்கிரஸ் கட்சி எம். பி. சவுகாதா ராய் சில கருத்துக்களை தெரிவித்தார். அதற்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பதில் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: ஒரு நாட்டிற்கு இரண்டு பிரதமர்கள், இரண்டு அரசியலமைப்பு, இரண்டு கொடிகள் எப்படி இருக்க முடியும்.

இதை செய்தவர்கள், தவறு செய்துள்ளனர். நம் நாட்டில் ஒரே பிரதமர், ஒரே கொடி, ஒரே அரசியலமைப்பு என நாங்கள் 1950ல் இருந்து கூறி வருகிறோம். அதை செய்துள்ளோம். இவ்வாறு அமித்ஷா குறிப்பிட்டார்.

# சென்னையில் படிப்படியாக மின் வினியோகம் வழங்கப்பட்டு வருகிறது: அமைச்சர் தங்கம் தென்னரசு

சென்னை, டிச.6

மிச்சாங் புயல் எதிரொலியால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட மாநிலங்களில் கனமழை பெய்தது. குறிப்பாக சென்னையில் இரண்டு நாட்களாக தொடர் மழை ஏற்பட்டது. சென்னையில் பெரும்பாலான இடங்களில் வெள்ளம் சூழ்ந்த நிலையில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டது. இதனால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், சென்னையில் படிப்படியாக மின் விநியோகம் நடைபெற்று வருவதாக அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மழை



நீர் தேக்கம், ஈரப்பதம் நிலவுவதால் மின்சாரம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

பொதுமக்களின் நலன் கருதி எச்சரிக்கையுடன் படிப்படியாக மின் விநியோகம் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

பொது மக்கள் அசாதாரண சூழலை புரிந்துகொண்டு மின் விநியோக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தர வேண்டும்

பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களை தவிர்க்க மின்சார வாரியம் முழுமூச்சு டன் பணியாற்றி வருகிறது.

சென்னையில் மொத்தமுள்ள 1,812 மின்னூட்டிகளில் 1,610 மின்னூட்டிகள் முழுமையாக சீரமைக்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள மின்னூட்டிகளை சீரமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பட்டினப்பாக்கம், புளியந்தோப்பு, பின்னி மில், நேரு ஸ்டேடியம், தாமோதரன் தெரு, முத்தமிழ் நகர், கொளத்தூர் பாலாஜி நகர், சாத்தாங்காடு, மீஞ்சூர், கல் மண்டபம், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, முடிச்சூர், பள்ளிக்கரணை, வேளச்சேரி, பெரும்பாக்கம் பகுதிகளில் மழை நீர் தேக்கம் இருப்பதால் மின்சாரம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# திமுக ஆட்சியில் சரியான திட்டமிடல் இல்லாததால் மக்கள் இன்னல்களை சந்திக்கின்றனர்: எடப்பாடி பழனிசாமி

சென்னை, டிச.6

மிச்சாங் புயல் எதிரொலியால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆய்வு மேற்கொண்டார்.

இதன் பிறகு செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:

வானிலை மையம் எச்சரித்த போதும் திமுக அரசு திட்டமிட்டு நடவடிக்கை எடுக்கவில்லை. மழை வெள்ள பாதிப்புகளை அரசு திட்டமிட்டபடி



செயல்படுத்தவில்லை. தற்போது சரியான திட்டமிடல் இல்லாத காரணத்தால், மக்கள் இன்னல்களை சந்திக்கின்றனர். ரூ. 4 ஆயிரம் கோடியில் மழைநீர் வடிகால் பணிகள் நடைபெற்றதாக கூறியது என்ன ஆனது ?. முகாமில் உணவு, மருத்துவ வசதிகள் கிடைப்பதில்லை. உணவு , மருத்துவ வசதி கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகிறார்கள்.

அதிமுக ஆட்சிக்காலத்தில் பருவமழை தொடங்குவதற்கு முன்பே திட்டமிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதிமுக ஆட்சியில் முகாம்களில் மக்கள் நன்கு பராமரிக்கப்பட்டனர்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டிருந்தார்.

# புயல் மழை பாதிப்புக்காக மத்திய அரசிடம் ரூ.5 ஆயிரம் கோடி கேட்கப்படும்: முதல்வர்

சென்னை, டிச.6

சென்னையில் வெள்ளம் பாதித்த வடசென்னை பகுதிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காலையில் பார்வையிட்டார்.

மழை நீர் தேங்கிய இடங்களுக்கு ஜீப்பில் சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தார். அப்போது நேரு ஸ்டேடியம் வால்டாக்ஸ் சாலை அருகில் உள்ள கண்ணப்பர் திடல் பகுதியில் அமைக்கப்பட்ட நிவாரண முகாமுக்கு சென்று அங்குள்ள மக்களுக்கு உணவு வழங்கினார்.

பெரியமேடு ரிப்பன் மாளிகை பகுதிக்கும் சென்று பொதுமக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கினார். அதன் பிறகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

புயல் காரணமாக சென்னையில் வரலாறு காணாத அளவுக்கு மழை பொழிந்துள்ளது. மீனம்பாக்கத்தில் 43 செ.மீட்டரும், பெருங்குடியில் 44 செ.மீட்டர் மழையும் பதிவாகி உள்ளது. இதன் காரணமாக பல இடங்களில் தண்ணீர் தேங்கியது. நாங்கள் ஏற்கனவே எடுத்த நடவடிக்கை காரணமாக பாதிப்புகள் பெருமளவு குறைந்துள்ளது.

2015ம் ஆண்டு கடந்த ஆட்சி காலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

அன்றைக்கு நுங்கம்பாக்கத்தில் 29.4 செ.மீ. மழை பதிவாகி இருந்தது. மீனம்பாக்கத்தில் 34.5 செ.மீ. மழை பதிவானது. இப்போது பெருங்குடியில் 46 செ.மீ. மழையும், மீனம்பாக்கம் பகுதியில் 43 செ.மீ. மழையும், 36 மணி நேரத்தில் பதிவாகி உள்ளது. இது மிக மிக அதிகம்.

இந்த புயல் விரைந்து கடந்த செல்லாமல் நின்று மெதுவாக நகர்ந்து கடந்ததால் சென்னையில் அதிக மழை பெய்தது.

அதனால்தான் சென்னையில் வரலாறு காணாத





அளவுக்கு மழை வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இத்தகைய மிகப்பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டாலும்,

இந்த அரசு எடுத்த முன் எச்சரிக்கை நடவடிக்கை காரணமாக உயிரிழப்பு மற்றும் பொருட்சேதம் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.

2015ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 199 பேர் இறந்தனர். இன்று அதை விட அதிக மழை பெய்திருந்தாலும் கூட 7 பேர் மட்டுமே இறந்துள்ளனர்.

இதுவும் ஏற்பட்டிருக்க கூடாது. அதற்காக வருத்தப்படுகிறேன்.

தற்போது 9 மாவட்டங்களில் உள்ள 61666 நிவாரண முகாம்களில் மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 11 லட்சம் உணவு பொட்டலங்கள் இது வரை வழங்கி உள்ளோம். அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்பட்டு வருகிறது. காலையில் பால் பாக்கெட் வினியோகம் செய்யப்பட்டு உள்ளது.

மழை நீர் வடிகால் நன்றாக செயல்பட்டாலும் இறுதியில் அந்த தண்ணீர் கடலில் கலக்க அடையார் மற்றும் கூவம் முகத்துவாரங்களில் புயலின் காரணமாக அவை அதிகம் காணப்பட்டதால், இந்த நதிகளில் வெள்ளம் மெதுவாக வடிந்தது.

ஆனாலும் அரசு எடுத்து வந்த பணிகளின் காரணமாக வெள்ள பாதிப்பு குறைக்கப்பட்டுள்ளது. 2015ம் ஆண்டு செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து திட்டமிடாமல் அடையாறில் 1 லட்சம் கன அடி அளவுக்கு வெள்ள நீர் திடீரென திறந்து விடப்பட்டது. வெள்ளம் ஏற்பட்டதற்கு அது முக்கிய காரணமாக இருந்தது.

அது செயற்கை வெள்ளம். இப்போது இது இயற்கையாக ஏற்பட்டது. அதை புரிந்து கொள்ள வேண்டும்.

அரசு எடுத்த முன் எச்சரிக்கை நடவடிக்கை காரணமாக கடந்த 4 நாட்களில் செம்பரம்பாக்கத்தில் இருந்த நீரை முன் கூட்டியே திட்டமிட்டு திறந்த காரணத்தால் தான் இத்தகைய பெருமழையை சமாளித்து உள்ளோம். இத்தகைய பெருமழை பெய்த நிலையிலும் 8 ஆயிரம் கன அடி தண்ணீர் மட்டுமே திறக்கப்பட்டு உள்ளது.

இதனால் சென்னையில் பெய்த பெருமழையால் ஏற்பட்ட வெள்ளம், அடையார் ஆற்றில் தடையின்றி சென்று கடலில் கலக்க முடிந்தது. ஆனாலும் சென்னை மற்றும் புறநகரில் ஏற்பட்ட மழை பாதிப்பை அவ்வப்போது நான் கேட்டறிந்தேன்.

பெரும் இயற்கை சீற்றத்தால் மக்கள் பெரும் இன்னலுக்கு ஆளானாலும், ஒரு ஆட்சியின் உண்மையான கடமை என்பது இந்த இன்னல்களின் தாக்கத்தை குறைப்பதோடு அதில் இருந்து மக்கள் வெளிவர தேவையான முயற்சி மேற்கொள்வதே ஆகும்.

இந்த மழையிலும் அனைத்து தூய்மை பணியாளர்களும் பணியாற்றி வருகிறார்கள். அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள்,

ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் களத்தில் இயல்பு நிலை திரும்ப பணியாற்றி வருகின்றனர். அதனால் சென்னையில் இயல்பு நிலை திரும்ப தொடங்கி உள்ளது.

ரூ.4 ஆயிரம் கோடிக்கு பணிகள் செய்தும் சென்னை மிதக்கிறது என்று எதிர்க் கட்சித் தலைவர் பெரிய குற்றச்சாட்டை கூறி வருகிறார். நான் சொல்கிற ஒரே பதில் என்னவென்றால் இதை அரசியலாக்க விரும்பவில்லை. அவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருப்பதால் நான் சொல்ல விரும்புவது, ரூ.4 ஆயிரம் கோடி அளவுக்கு பணிகள் நடந்திருந்த காரணத்தால் தான், இவ்வளவு பெரிய வரலாறு காணாத 47 வருடமாக பார்க்காத மழையை நாம் இப்போது பார்த்திருக்கிறோம்.

அதில் இருந்து சென்னை தப்பியது என்றால் திட்டமிட்டு செலவு செய்து அந்த பணிகளை நிறைவேற்றிய காரணத்தால் தான் இன்று சென்னை தப்பி உள்ளது.

அதையும் புரிந்து கொள்ளுங்கள்.

அவர்கள் காலத்தில் எதுவும் செய்யவில்லை. ஆனால் தி.மு.க. ஆட்சியில் 2 ஆண்டு காலத்தில் இந்த பணிகளை செய்துள்ளோம். வரலாறு காணாத மழை வெள்ளத்தால் வெள்ள சேதம் ஏற்பட்டுள்ளது. குடியிருப்புகள் பாதிக்கப்பட்டு உள்ளது. ரோடுகள் பாதிக்கப்பட்டுள்ளது.

அதனால் மத்திய அரசிடம் 5 ஆயிரம் கோடி ரூபாய், உடனே ஒதுக்க வேண்டும் என்று கடிதம் இன்று எழுத போகிறோம். இதுகுறித்து பாராளுமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர்களும் பேச இருக்கிறார்கள். மக்கள் எங்களுக்கு முழு ஒத்துழைப்பு தந்துள்ளனர்.

முன்கூட்டியே சொல்லி எச்சரிக்கை கொடுத்ததற்கு மக்கள் நன்றாக ஒத்துழைத்தனர்.

இவ்வாறு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

அப்போது அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா ஆகியோரும் உடன் இருந்தனர்.

# லஞ்ச வழக்கில் கைதான அமலாக்கத்துறை அதிகாரி ஜாமீன் மனு தள்ளுபடி





திண்டுக்கல்,டிச.6

திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணிபுரிந்து வருபவர் டாக்டர் சுரேஷ்பாபு. இவர் மீது கடந்த 2018ம் ஆண்டு லஞ்ச ஒழிப்புத் துறை போலீசார் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கில் டாக்டர் சுரேஷ் பாபு மற்றும் அவரது மனைவி ஆகியோர் விடுவிக்கப்பட்ட நிலையில் துறை ரீதியான நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த வழக்கை மீண்டும் எடுத்து தாங்கள் விசாரிக்க இருப்பதாகவும், விசாரணை நடத்தாமல் இருக்க வேண்டுமானால் ரூ.51 லட்சம் தர வேண்டும் என மதுரையில் அமலாக்கத்துறை அதிகாரியாக இருந்த அங்கிட் திவாரி கூறியுள்ளார்.

அதன்படி 2வது தவணையாக ரூ.20 லட்சத்தை பெற்றுக் கொண்டு திண்டுக்கல்லில் இருந்து மதுரைக்கு காரில் திரும்பிச் சென்ற போது விரட்டிச்சென்ற லஞ்ச ஒழிப்புத்துறையினர் அங்கிட் திவாரியை கைது செய்தனர். 15 மணி நேர விசாரணைக்கு பின்பு திண்டுக்கல் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி திண்டுக்கல் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் பின்னர் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

அவரை வருகிற 15ம் தேதி வரை நீதிமன்ற காவலில் அடைக்க நீதிபதி மோகனா உத்தரவிட்டார். இதனையடுத்து தனக்கு ஜாமீன் வழங்க கோரி திண்டுக்கல் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அங்கிட் திவாரி தரப்பில் வக்கீல் விவேக் பாரதி மனு தாக்கல் செய்தார். அந்த மனு இன்று நீதிபதி மோகனா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அங்கிட் திவாரி சார்பில் வாதிட்ட விவேக் பாரதி அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது. எனவே பிரதிவாதிக்கு ஜாமீன் வழங்க வேண்டும் என கூறினார்.

ஆனால் இதனை எதிர்த்த அரசு தரப்பு வக்கீல் அனுராதா, நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி டிஜிட்டல் முறையில் ஆவணப்படுத்தியும் களவுமாக ரூ.20 லட்சம் லஞ்சப்பணத்துடன் அங்கிட் திவாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு ஆரம்ப கட்ட நிலையில் உள்ளதால் அவருக்கு ஜாமீன் வழங்கக்கூடாது என எதிர்ப்பு தெரிவித்தார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி மோகனா அங்கிட் திவாரி ஜாமீன் மனுவை தள்ளுபடிசெய்துஉத்தரவிட்டார்.

இதுகுறித்து லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் கூறுகையில், மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த அங்கிட் திவாரி கடந்த 2018ம் ஆண்டு உதவி அமலாக்கத் துறை அதிகாரியாக பணியில் சேர்ந்தார். பின்னர் பதவி உயர்வு பெற்று கடந்த ஏப்ரல் மாதம் முதல் மதுரையில் உள்ள அமலாக்கத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில் விசாரணை அதிகாரியாக பணிபுரிந்தார்.

எம்.என். நகரில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கி இருந்த அவர் சில உயர் அதிகாரிகளின் உடந்தையுடன் பல்வேறு வழக்குகளில் பெரும் தொகையை பேரம் பேசி கிடைக்கும் பணத்தை 7 அதிகாரிகளுடன் பங்கிட்டு கொள்வதை வாடிக்கையாக வைத்திருந்தார். அவருடன் முறைகேட்டில் ஈடுபட்ட அதிகாரிகளின் பெயர் விபரங்களை பெறுவதற்காக அங்கிட் திவாரியை காவலில் எடுத்து விசாரிக்க திட்டமிட்டுள்ளோம்.

இது தொடர்பாக அவருடன் தொடர்பில் உள்ள அதிகாரிகளுக்கு சம்மன் அனுப்பவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# பள்ளிக்கரணையில் 2 ஆயிரம் வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது: தண்ணீரை வெளியேற்றும் பணி தீவிரம்





சென்னை, டிச.6

சென்னையை போட்டு தாக்கிய புயல் மழையால் தண்ணீரில் பல பகுதிகள் தத்தளிக்கிறது. பள்ளிக்கரணை பகுதி முழுவதுமாக தத்தளிக்கிறது. நேற்று பலத்த மழை கொட்டியதால் மக்கள் வீடுகளில் முடங்கி இருந்தனர்.

வெளியே இறங்க முடியாத அளவுக்கு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வீடுகள் முன்பு நிறுத்தி இருந்த கார்களை வெள்ளம் இழுத்து புரட்டி போட்டது.

நாராயணபுரம் ஏரி தண்ணீர் பள்ளிக்கரணையை சூழ்ந்து நிற்கிறது. காமகோடி நகர், சாய் பாலாஜி நகர், எல்.ஐ.சி. நகர் பகுதிகளை வெள்ளம் மூழ்கடித்து தீவு போல் காட்சியளிக்கிறது. சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் தண்ணீரில் தத்தளிக்கிறது.

பெரும்பாலான அடுக்கு மாடி குடியிருப்புகளில் தரை தளம் முழுவதும் தண்ணீர் நிறைந்து நிற்கிறது. டி.வி., பிரிட்ஜ் மற்றும் மின்சாதன பொருட்கள் தண்ணீரில் மூழ்கி நாசமாகி கிடக்கிறது. பலர் வீடுகளை காலி செய்து விட்டனர்.

இந்த பகுதி தண்ணீர் தேக்கம் பற்றி அந்த பகுதியில் மாடியில் தஞ்சம் புகுந்துள்ள ஜிந்தா என்பவர் கூறியதாவது:

பல பகுதிகளில் இருந்து வரும் மழை தண்ணீர் இந்த பகுதி வழியாக வேளச்சேரி சதுப்பு நிலத்தை சென்றடையும். அங்கிருந்து வெளியேறி கடலுக்கு செல்லும்.

ஆனால் சதுப்பு நிலத்தில் இருந்து தண்ணீர் வடிந்து கடலுக்கு செல்லும் வழியை சீரமைக்கவில்லை. இப்படி இருக்கும்போது தண்ணீர் எங்கே போகும்? முறையான ஏற்பாடுகள் செய்யாததால் தான் இவ்வளவு சீரழிவு என்றார்.

2015க்கு பிறகு அதே போல் மீண்டும் ஒரு வெள்ள பாதிப்பை முடிச்சூர் பகுதி சந்தித்துள்ளது. அமுதம் நகர், வரதராஜபுரம் பகுதியில் சுமார் 6 அடி உயரத்துக்கு வெள்ளம் சூழ்ந்து உள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் வெள்ளம் சூழ்ந்து உள்ளது.

வர்தா புயலின்போது இந்த பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் தேசிய அளவில் பேசப்பட்டது. ராகுல் காந்தி, கலைஞர் கருணாநிதி, மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட பல தலைவர்கள் இந்த பகுதியை நேரில் பார்வையிட்டார்கள்.

அப்போதைய காஞ்சிபுரம் கலெக்டர் அதிரடியாக நடவடிக்கை எடுத்து நீர்வழித்தட ஆக்கிரமிப்புகளை இடித்து தள்ளினார். ஆதனூரில் தொடங்கிய இந்த பணி அனகாபுத்தூர் அருகே வரை மேற்கொள்ளப்பட்டது. அதன் பிறகு தொடரவில்லை.

இதை முறையாக நிறைவேற்றி அடையாறு ஆற்றுடன் இணைத்து இருந்தால் முடிச்சூர் பகுதியில் வெள்ளம் தேங்கி இருக்காது என்று அந்த பகுதியில் வசிப்பவர்கள் ஆதங்கப்படுகிறார்கள்.

வீடுகளில் தவிக்கும் பொதுமக்களால் வெளியே வரவும் முடியவில்லை. தெருக்களில் அதிக அளவு வெள்ளம் வடிந்த பிறகே வெளியே வர முடியும். மின்சாரமும் தடைபட்டு உள்ளதால் வீடுகளில் முடங்கி இருக்கும் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள்.

ஆங்காங்கே மோட்டார்கள் மூலம் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

# மழையால் பாதித்த பொதுமக்களுக்கு 8 லட்சத்து 45 ஆயிரம் உணவு பொட்டலம் வினியோகம்



சென்னை, டிச.6

மிச்சாங் புயல் தமிழக கடலோர மாவட்டங்களை கடந்து சென்ற நிலையில், கடலோர மாவட்டங்களில் அதிக மழையின் காரணமாக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது.

இதையொட்டி முன் எச்சரிக்கை நடவடிக்கையாக வருவாய் பேரிடர் துறை சார்பில் தாழ்வான பகுதியில் வசிக்கும் பொதுமக்களை நிவாரண முகாம்களில் தங்க வைத்தனர்.

இதையொட்டி 411 நிவாரண முகாம்களில் 5565 குடும்பங்களை சேர்ந்த 18,750 பேர் தங்க வைக்கப்பட்டனர். இவர்களுக்கு 52 ஆயிரத்து 981 உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டது.

நிவாரண முகாம்கள் மட்டுமின்றி வீட்டை விட்டு வெளியே வர முடியாமல் தவித்த பொதுமக்களுக்கும் உணவு பொட்டலங்கள் வினியோகிக்கப்பட்டது.

அந்த வகையில் சென்னையில் 5 லட்சத்து 87 ஆயிரத்து 280 உணவு பாக்கெட்களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 64,380 உணவு பொட்டலங்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1 லட்சத்து 9 ஆயிரத்து 58 உணவு பொட்டலங்கள், செங்கல்பட்டு மாவட்டத்தில் 91 ஆயிரத்து 983 உணவு பொட்டலங்கள் என மொத்தம் 8 லட்சத்து 44 ஆயிரத்து 601 உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மழையின் காரணமாக 1ந்தேதி முதல் இதுவரை 8 பேர் இறந்துள்ளதாகவும் பேரிடர் மேலாண்மைத் துறை அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

# இன்று பாபர் மசூதி இடிப்பு தினம்: கோவையில் 2 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு



கோவை, டிச.6

ஆண்டுதோறும் டிசம்பர் 6ந் தேதி பாபர் மசூதி இடிப்பு தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. நாளை நாடு முழுவதும் பாபர் மசூதி தினம் அனுசரிக்கப்பட உள்ளது. இதனையொட்டி நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில், கோவை மாவட்டத்திலும் பாபர் மசூதி தினத்தையொட்டி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மாநகரில் 1,200 போலீசார் புறநகரில் 800 போலீசார் என மொத்தம் மாவட்டம் முழுவதும் 2 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கோவையில் அசம்பாவித சம்பவங்களை தடுக்கும் பொருட்டு பொதுமக்கள் அதிகம் கூடக்கூடிய இடங்களான பஸ் நிலையங்கள், ரெயில் நிலையம், வழிபாட்டு தலங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

காந்திபுரம் நகர பஸ் நிலையம், மத்திய பஸ் நிலையம், திருவள்ளுவர் பஸ் நிலையம், சிங்காநல்லூர், பொள்ளாச்சி, உக்கடம், சூலூர், மேட்டுப்பாளையம், கிணத்துக்கடவு, அன்னூர், வால்பாறை உள்ளிட்ட அனைத்து பகுதிகளில் உள்ள பஸ் நிலையங்களிலும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பஸ் நிலையங்களுக்கு வரும் பயணிகளையும் தீவிரமாக கண்காணிக்கின்றனர். சந்தேகத்திற்கிடமாக யாராவது சுற்றி திரிந்தால் அவர்களை பிடித்து விசாரித்தும் வருகின்றனர்.

பஸ்களிலும் ஏறி அடிக்கடி சோதனை நடத்தி வருகின்றனர். இதுதவிர வெடிகுண்டு நிபுணர்கள் உதவியுடன் பஸ் நிலையம் முழுவதும் தீவிர சோதனையும் மேற்கொண்டனர். மக்கள் வைத்திருந்த பைகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதுதவிர கோவை மாவட்டத்தில் உள்ள கோவில்கள், தேவாலயங்கள், பள்ளி வாசல்கள் உள்ளிட்ட அனைத்து வழிபாட்டு தலங்களிலும் துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கோவிலுக்கு வரும் பக்தர்கள் அனைவரும் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றனர். இதேபோல் மக்கள் அதிக நடமாட்டம் இருக்க கூடிய மார்க்கெட்டுகள், கடைவீதிகளிலும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கோவைசந்திப்பு ரெயில் நிலையத்திலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. ரெயில்வே போலீசார் மற்றும் மாநகர போலீசார் இணைந்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ரெயில் நிலையத்திற்கு வரும் பயணிகள் அனைவரும் தீவிர சோதனைக்கு பின்னரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். அவர்களின் உடமைகளும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

ரெயில் நிலையம் மற்றும் ரெயில்களில் ஏறி ஒவ்வொரு பெட்டியாக சென்று சோதனை மேற்கொண்டனர். மேலும் ரெயில்வே தண்டவாளங்களிலும் மோப்ப நாய் மற்றும் வெடிகுண்டை கண்டறியும் கருவிகளை கொண்டு சோதனை செய்தனர்.

கோவை பீளமேடு அருகே உள்ள விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அங்கு 3 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

விமான நிலையத்திற்கு வரும் பயணிகள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களின் உடமைகளும் சோதனையிடப்பட்டன. மத்திய தொழில்பாதுகாப்பு படையினரும் துப்பாக்கி ஏந்திய நிலையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே பாபர் மசூதி இடிப்பு தினத்தையொட்டி நாளை உக்கடம் பகுதியில் போராட்டமும் நடக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அந்த பகுதியில் பாதுகாப்பு மிகவும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

# சென்னையில் மிக் ஜாம் புயல் பாதிப்பு சீரமைப்பு பணிகள்: 26 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை களமிறக்கிய ஸ்டாலின்




சென்னை, டிச.6

சென்னை, தாம்பரம் மற்றும் ஆவடி மாநகராட்சிகளுக்கு மிக்ஜாம் புயல் பாதிப்பு மீட்பு பணிகளுக்கென கூடுதலாக 26 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை மாநகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வரலாறு காணாத மழை பொழிவு ஏற்பட்டுள்ளதால், புயல் கரையைக் கடந்த பிறகு உடன் மீட்பு பணிகளைத் துரிதப்படுத்தவும், மழை நீர் விரைவில் வடிவதை உறுதி செய்யவும், வெளி மாவட்டங்களில் இருந்து நூற்றுக்கணக்கில் சிறப்பு பணிக்கென வரவழைக்கப்பட்டுள்ள தூய்மை பணியாளர்களின் பணியினை ஒருங்கிணைக்கவும், சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்தவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு களத்தில் பணிபுரிந்து வரும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுடன் கூடுதலாகப் பின்வரும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்:

கூடுதலாக நியமிக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் மற்றும் பதவி

1.கே.எஸ். கந்தசாமி, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

2. டி. ஜெகந்நாதன் ஆணையர், வணிகவரித் துறை

3. எஸ். திவ்யதர்ஷினி, மேலாண்மை இயக்குநர்,தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகம்

4.சந்தீப் நந்தூரி, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சிக் கழகம்

5.தர்மேந்திர பிரதாப் யாதவ், அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

6. டாக்டர். எஸ். பிரபாகர், திட்ட இயக்குநர், தமிழ்நாடு நகரப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்.

7. விஜய கார்த்திகேயன், இணை மேலாண்மை இயக்குநர், மாநில மனித உரிமை ஆணையம்

8. ஜெ. குமரகுருபரன், செயலாளர், பள்ளிக் கல்வித் துறை

9. பி. கணேசன், இயக்குநர், நகர ஊரமைப்பு இயக்ககம்

10.எஸ். சுரேஷ் குமார், முதன்மைச்செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

11. எஸ். பழனிச்சாமி, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்.

12. குமார் ஜயந்த், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

13.பிரதாப், துணைச் செயலாளர், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை

14. பூஜா குல்கர்னி, ஆணையர், புவியியல் மற்றும் சுரங்கத் துறை

15. எஸ். அருண்ராஜ் நிர்வாக இயக்குநர்,தமிழ்நாடு மின்னணு கழகம்

16. இ. சுந்தரவள்ளி, ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

17.ககன்தீப் சிங் பேடி, முதன்மைச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை

18.ஏ.கே.கமல்கிஷோர், இயக்குநர்,மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

19.எம்.எஸ். பிரசாந்த், கூடுதல் இயக்குநர் (பொது), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

20. வி.ஆர். சுப்புலட்சுமி, இணை ஆணையர், வணிக வரித் துறை

21. டாக்டர் தரேஷ் அகமது, செயலாளர், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

22.கொ. வீரராகவ ராவ், ஆணையர்,தொழில்நுட்ப கல்வி இயக்ககம்

23. ஜான் லூயிஸ், மேலாண்மை இயக்குநர்,,தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

24.எஸ். நாகராஜன், நில நிர்வாக ஆணையர், ஆவடி மாநகராட்சி

25.ஏ.சண்முக சுந்தரம், போக்குவரத்து ஆணையர்,

26.அன்சுல் மிஸ்ரா, உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்.

மீட்புப் பணிகள் மற்றும் பிற உதவிகளுக்கென 24 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி எண்கள் 1913,25619206/207/208 (சென்னை மாநகராட்சி), 18004254355, 18004251600 (தாம்பரம் மாநகராட்சி) மற்றும் 18004255109ஐ (ஆவடி மாநகராட்சி) தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இந்த எண்களைத் தொடர்புகொள்வதில் ஏதேனும் சிரமமிருப்பின் கட்டணமில்லா தொலைபேசி எண்கள் 102 மற்றும் 104ஐ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# வேளச்சேரியில் நடைபெறும் மீட்புப் பணிகள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு




சென்னை, டிச.6

மிக்ஜம் புயல் காரணமாக சென்னையில் கன மழை பெய்தது.

இதனால் பல்வேறு பகுதிகளில் மழைநீர் தேங்கியது. மேலும் சில இடங்களில் குடியிருப்பு பகுதிகளுக்குள் தண்ணீர் புகுந்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வேளச்சேரியில் வெள்ளம் பாதித்த பகுதிகளில் நடைபெற்று வரும் மீட்புப் பணிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் மா.சுப்பிரமணியன், அமைச்சர் கே.என்.நேரு, மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர்.

கனமழையின் காரணமாக தென் சென்னை பகுதிகளில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வேளச்சேரி, மடிப்பாக்கம் உள்ளிட்ட இடங்களில் 43 செ.மீ. மழைப்பொழிவு பதிவான நிலையில், அங்கு அதிக அளவில் தண்ணீர் தேங்கியுள்ளது.

இந்த சூழலில் வேளச்சேரி ஐந்து பர்லாங் சாலை பகுதியில், பைபர் படகுகள்மூலம் பொதுமக்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை ஆய்வு செய்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அங்குள்ள மக்களை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்தார்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 06.12.2023

# முதல்அமைச்சர் தூங்க மாட்டார்: கவிஞர் வைரமுத்து சமூகவலைதள பதிவு



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் மீட்பு பணிகளை தமிழக அரசு தீவிரமாக மேற்கொண்டு வரும் நிலையில் அதுகுறித்து கவிஞர் வைரமுத்து சமூகவலைதளத்தில் கூறியிருப்பதாவது:

முதல்அமைச்சரின் வழிகாட்டுதலோடு அவரது துடிப்பையும் துயரத்தையும் புரிந்து கொண்ட அமைச்சர்களும், அதிகாரிகளும், களப்பணியாளர்களும் படையாக இணைந்தார்கள்; குடையாக நனைந்தார்கள்

அவர்களின் நற்றொண்டு மக்களுக்கு நம்பிக்கையூட்டியது மழை ஓய்ந்த பிறகும் அவர்கள் ஓய்ந்தாரில்லை. இயற்கை ஒரேநாளில் சவால் விடுகிறது. மனிதன்தான் பலநாள் போராடுகிறான். இறுதிவெற்றி மனிதனுக்குத்தான்.

திறமையோடும் தீவிரத்தோடும் அரும்பணி ஆற்றுவோரைப் பாராட்டுகிறோம். விமர்சனங்களை விடுங்கள். இது மீட்சிக்கு ஓர் ஆட்சி என்று நடுநிலையாளர் நற்சான்று தருவர். முதல்அமைச்சர் தூங்கமாட்டார், நீரோடும் சாலைகளில் காரோடும் வரைக்கும்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# நாங்க எதுக்காக வரி கட்டுறோம்னு கேக்க வச்சுடாதீங்க... விஷால் வெளியிட்ட வீடியோ





மிச்சாங் புயல் காரணமாக சென்னையில் இரவு முழுக்க பெய்த கனமழை, தீவிர காற்று காரணமாக சென்னையே நிலைகுலைந்து போய் உள்ளது. நேற்று சென்னையில் தொய்வின்றி பெய்த மழையால் பொதுமக்கள் வீடுகளில் இருந்து வெளியே வரமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர். இதனால், சென்னையின் இயல்பு வாழ்க்கை முடங்கியது.

சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெய்த கனமழையால், பல இடங்கள் தண்ணீர் தேங்கி வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்துள்ளதால் மக்கள் சிரமத்திற்கு உள்ளாகி உள்ளனர்.

இந்நிலையில் சென்னை மாநகராட்சியையும் ஆட்சியாளர்களையும் விமர்சித்து நடிகர் விஷால் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் வீடியோ ஒன்றை பதிவிட்டுள்ளார். அவர் அந்த வீடியோவில், 'எல்லாருக்கும் தெரிந்த விஷயம்தான் புயல் வந்தால் முதலில் மின்சாரம் துண்டிக்கப்படும், பின்னர் தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக வீட்டுக்குள் வரும். அண்ணா நகரில் உள்ள என் வீட்டில் கூட ஒரு அடிவரை தண்ணீர் தேங்கியுள்ளது. இங்கு இந்த நிலைமை என்றால் தாழ்வான பகுதிகளில் இதை விட மோசமானதாக இருக்கும்.

2015ல் நடக்கும்போது எல்லாரும் ஒன்றாக இணைந்து இறங்கி வேலை செய்தோம். முடிந்த அளவு பொதுமக்களுக்கு சேவை செய்தோம். 8 வருடங்களுக்கு பிறகு அதைவிட மோசமான ஒரு நிலை ஏற்பட்டிருப்பது கேள்விக்குறியாக உள்ளது. மழைநீர் வடிகால் பணிகளை சென்னை மாநகராட்சி தொடங்கியது. அது எங்கே தொடங்கி எங்கே முடித்தார்கள் என்று தெரியவில்லை. நான் இதை ஒரு நடிகனாக கேட்கவில்லை, வாக்காளராக கேட்கிறேன்.

சென்னையில் உள்ள அனைத்து தொகுதி எம்.எல்.ஏ.க்களும் வெளியே வந்து பொதுமக்களுக்காக சேவை செய்ய வேண்டும். உங்கள் தொகுதிக்கு நீங்கள் உதவினால் பொதுமக்களுக்கு அது ஒரு தன்னம்பிக்கையை கொடுக்கும். ஏனென்றால் வீட்டில் குழந்தைகள், முதியவர்கள் என எல்லாரும் பயந்து இருப்பார்கள். இது அரசியல் தொடர்பான குற்றச்சாட்டு அல்ல, இது ஒரு தர்மசங்கடமான கேவலமான விஷயமாக நான் பார்க்கிறேன்.

இது ஒரு முக்கியமான பதிவு. தயவு செய்து அரசாங்க அதிகாரிகள் வேலை செய்து மக்களுக்கு உதவ வேண்டும். ஏனென்றால் நாங்கள் வரி கட்டுகிறோம். நாங்கள் எதற்காக வரி கட்டுகிறோம் என்று கேட்க வைத்து விடாதீர்கள். மக்கள் நீங்கள் உதவி செய்வீர்கள் என்று எதிர்பார்ப்பார்கள். கண்டிப்பாக இந்த நேரத்தில் உங்கள் முகம் தெரிந்தால் நன்றாக இருக்கும்' என்று பதிவிட்டுள்ளார். அவரின் இந்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது.

# வெள்ளத்தில் சிக்கிய நடிகர்கள் அமீர் கான், விஷ்ணு விஷாலை படகு மூலம் மீட்ட தீயணைப்புத்துறை



மிச்சாங் புயல் எதிரொலியால், சென்னை மாநகரமே வெள்ளத்தால் சூழ்ந்துள்ளது. சென்னை மடிப்பாக்கம், பெருங்குடி, பள்ளிக்கரணை ஆகிய பகுதிகளின் தான் அதிக கனமழை பெய்துள்ளது. இதனால், வேளச்சேரி, காரப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளிலும் மார்பளவு வரை தண்ணீர் தேங்கியுள்ளது. வீட்டிற்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது. இதனால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகஅரசின்உத்தரவின்பேரில்பொதுமக்களைமீட்கும்பணியில்மீட்புபடையினர் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், காரப்பாக்கத்தில் வசித்து வரும் நடிகர் விஷ்ணு விஷால் தான் பாதிக்கப்பட்டுள்ளதாக எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார். இதேபோல், பாலிவுட் நடிகர்அமீர்கானும் வெள்ள பாதிப்பில் சிக்கியுள்ளதாக செய்தி வெளியானதை அடுத்து மீட்பு படையினர் விரைந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இதைதொடர்ந்து, நடிகர்கள் அமீர் கான் மற்றும் விஷ்ணு விஷால் ஆகியோரை படகு மூலம் தீயணைப்புதுறையினர் மீட்டுள்ளனர். இந்நிலையில், தங்களை உடனடியாக மீட்ட தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்து நடிகர் விஷ்ணு விஷால் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில், "சிக்கித் தவிக்கும் எங்களைப் போன்ற மக்களுக்கு உதவிய தீயணைப்பு மற்றும் மீட்புத் துறைக்கு நன்றி. காரப்பாக்கத்தில் மீட்பு பணிகள் தொடங்கியுள்ளன. ஏற்கனவே 3 படகுகள் இயங்குவதை பார்த்தேன். இதுபோன்ற சோதனையான காலங்களில் தமிழக அரசின் சிறப்பான பணி அயராது உழைக்கும் அனைத்து நிர்வாக மக்களுக்கும் நன்றி" என்று குறிப்பிட்டிருந்தார்.

# வெஸ்ட்இண்டீஸ் அணிக்கு இங்கிலாந்து பதிலடி கொடுக்குமா? இன்று 2வது போட்டி





பட்லர் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீசில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 3 ஒருநாள் போட்டித் தொடரில் ஆன்டிகுவாவில் நடந்த முதல் ஆட்டத்தில் வெஸ்ட் இண்டீஸ் வெற்றி பெற்றது. அந்த அணி 326 ரன் இலக்கை எடுத்து வெற்றி பெற்றது. வெஸ்ட்இண்டீஸ் இங்கிலாந்து அணிகள் மேலும் 2வது ஒருநாள் போட்டி ஆன்டிகுவாவில் உள்ள விவியன் ரிச்சர்ட்ஸ் மைதானத்தில் நடக்கிறது. முதல் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு இங்கிலாந்து அணி பதிலடி கொடுக்குமா? என்று ஆவலுடன் எதிர் பார்க்கப்படுகிறது. இங்கிலாந்து அணியின் பேட்டிங்கில் ஹாரி புருக், கிராவ்லி, பில்சால்ட் ஆகியோரும் பந்து வீச்சில் அட்சின்சன், ரீகான் அகமது ஆகியோரும் நல்ல நிலையில் உள்ளனர். ஷாய் ஹோப் தலைமையிலான வெஸ்ட்இண்டீஸ் இந்த ஆட்டத்தில் வென்று தொடரைகைப்பற்றும் ஆர்வத்தில் இருக்கிறது. கடந்த ஆட்டத்தில் கேப்டன் ஷாய் ஹோப் சதம் அடித்து வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தார். இரு அணிகளும் இன்று மோதுவது 104வது ஒருநாள் போட்டியாகும். இதுவரை நடந்த 103 போட்டியில் இங்கிலாந்து 52ல், வெஸ்ட்இண்டீஸ் 45ல் வெற்றி பெற்றுள்ளன. 6 ஆட்டம் முடிவு இல்லை.

# ஜூனியர் உலக கோப்பை ஹாக்கி தொடக்கம்: இந்திய அணி தென்கொரியாவுடன் மோதல்



ஜூனியர்உலககோப்பைஹாக்கிப்போட்டிமலேசிய தலைநகர் கோலாம்பூரில் தொடங்கியது. வருகிற 16 ந்தேதி வரை நடைபெறும் இந்தப் போட்டியில் 16 நாடுகள் பங்கேற்கின்றன. அவை 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. 'லீக்' முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தை பிடிக்கும் அணி கால் இறுதிக்கு தகுதி பெறும். இந்திய அணி 'சி' பிரிவில் இடம் பெற்றுள்ளது. ஸ்பெயின், கனடா, தென்கொரியா ஆகிய அணிகளும் இந்த பிரிவில் உள்ளன. 'ஏ' பிரிவில் நடப்பு சாம்பியன் அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, சிலி, மலேசியா அணிகளும் 'பி' பிரிவில் எகிப்து, பிரான்ஸ், தென்ஆப்பிரிக்கா அணிகளும், 'டி' பிரிவில் பெல்ஜியம், நெதர்லாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளும் இடம் பெற்றுள்ளன. இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் தென்கொரியாவை இன்று எதிர்கொள்கிறது. இரு அணிகளும் 6 முறை மோதியுள்ளன. இதில் இந்தியா 3ல் தென்கொரியா 2ல் வெற்றி பெற்றுள்ளன. ஒரு ஆட்டம் டிரா ஆனது. இந்திய அணி 2வது ஆட்டத்தில் ஸ்பெயினை 7ந்தேதி யும், 3வது போட்டியில் கனடாவை 9ந்தேதியும் எதிர் கொள்கிறது. 2001, 2016ம் ஆண்டு சாம்பியனான இந்திய அணி 3வது முறையாக உலக கோப்பையை வெல்லுமா? என்று எதிர் பார்க்கப்படுகிறது. ஆட்டங்களில் பிரான்ஸ்எகிப்து, ஜெர்மனிதென்ஆப்பிரிக்கா, ஸ்பெயின்கனடா, அர்ஜென்டினாஆஸ்திரேலியா, மலேசியாசிலி அணிகள் மோதுகின்றன.

# இந்தியாவுக்கு எதிரான தொடர்: தென்ஆப்பிரிக்க அணி அறிவிப்பு 2 முக்கிய வீரர்களுக்கு ஓய்வு



இந்திய கிரிக்கெட் அணி தென்ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று 20 ஓவர், 3 ஒரு நாள் மற்றும் இரண்டு டெஸ்டுகளில் விளையாடுகிறது. இந்தியா தென்ஆப்பிரிக்கா இடையிலான முதலாவது 20 ஓவர் போட்டி வருகிற 10ந்தேதி டர்பனில் நடக்கிறது. இந்திய தொடருக்கான தென்ஆப்பிரிக்க அணி நேற்று அறிவிக்கப்பட்டது. உலகக்கோப்பை கிரிக்கெட்டில் காயத்துடன் ஆடிய கேப்டன் பவுமா, வேகப்பந்து வீச்சாளர் ககிசோ ரபடா ஆகியோருக்கு வெள்ளைநிற பந்து தொடரில் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் 20 ஓவர் மற்றும் ஒருநாள் தொடருக்கான தென்ஆப்பிரிக்க அணியின் கேப்டனாக எய்டன் மார்க்ரம் நியமிக்கப்பட்டு உள்ளார். வேகப்பந்து வீச்சாளர்கள் ஜெரால்டு கோட்ஜீ, மார்கோ யான்சென், இங்கிடி ஆகியோர் முதல் இரு 20 ஓவர் போட்டிகளில் மட்டும் விளையாடிவிட்டு அதன் பிறகு டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு தயாராவதற்காகஉள்ளூர்முதல்தரபோட்டிகளில்ஆடுகிறார்கள். டெஸ்ட்தொடர்உலகடெஸ்ட்சாம்பியன்ஷிப்புக்கு உட்பட்டது என்பதால் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. டெஸ்ட் போட்டியின் கேப்டனாக பவுமா செயல்படுவார். தென்ஆப்பிரிக்க 20 ஓவர் போட்டி அணி: மார்க்ரம் (கேப்டன்), ஓட்னில் பார்ட்மேன், மேத்யூ பிரீட்ஸ்கே, பர்ஜர், கோட்ஜீ, டோனோவன் பெரீரா, ரீஜா ஹென்ரிக்ஸ், மார்கோ யான்சென், கிளாசென், கேஷவ் மகராஜ், டேவிட் மில்லர், இங்கிடி, பெலுக்வாயோ, ஷம்சி, ஸ்டப்ஸ், லிசாட் வில்லியம்ஸ்.

தென்ஆப்பிரிக்க ஒருநாள்போட்டி அணி: மார்க்ரம் (கேப்டன்), ஓட்டினல் பார்ட்மேன், பர்ஜர், டோனி டி ஜோர்ஸி, ரீஜா ஹென்ரிக்ஸ், கிளாசென், கேஷவ் மகராஜ், போங்வானா, டேவிட் மில்லர், வியான் முல்டர், பெலுக்வாயோ, ஷம்சி, வான்டெர் டஸன், கைல் வெரைன், லிசாட் வில்லியம்ஸ்

டெஸ்ட் அணி: பவுமா (கேப்டன்), டேவிட் பெடிங்ஹம், பர்ஜர், ஜெரால்டு கோட்ஜீ, டோனி டி ஜோர்ஸி, டீன் எல்கர், மார்கோ யான்சென், கேஷவ் மகராஜ், மார்க்ரம், வியான் முல்டர், இங்கிடி, கீகன் பீட்டர்சன், ககிசோ ரபடா, டிரிஸ்டன் ஸ்டப்ஸ், கைல் வெரைன்.

# புரோ கபடி லீக் போட்டி: பெங்களூர் அணியை வீழ்த்தியது பெங்கால் வாரியர்ஸ்



10வது புரோ கபடி லீக் போட்டி அகமதாபாத்தில் நடைபெற்று வருகிறது. ஆட்டத்தில் புனேரி பால்டன் 37–33 என்ற கணக்கில் முன்னாள் சாம்பியன் ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்சை தோற்கடித்தது. மற்றொரு ஆட்டத்தில் பெங்கால் வாரியர்ஸ்பெங்களூரு புல்ஸ் அணிகள் மோதின. பரபரப்பான இந்த ஆட்டத்தில் பெங்கால் வாரியர்ஸ் 3230 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்றது. பெங்கால் அணி தனது முதல் ஆட்டத்திலேயே வெற்றி பெற்று முத்திரை பதித்தது. பெங்களூர் அணி 2வது தோல்வியை தழுவியது. ஆட்டத்தில் குஜராத் ஜெயன்ட்ஸ் மும்பை அணிகள் மோது கின்றன. குஜராத் அணி ஹாட்ரிக் வெற்றியை பெறுமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அணி முதல் ஆட்டத்தில் தெலுங்கு டைட்டன்சை 38–22 என்ற கணக்கிலும், 2வது போட்டியில் 34–31 என்ற கணக்கில் பெங்களூரையும் தோற்கடித்து இருந்தது. மும்பை அணி முதல் ஆட்டத்தில் 34–31 என்ற கணக்கில் உ.பி. யோதாவை தோற்கடித்தது. அந்த அணி 2வது வெற்றியை பெறும் ஆர்வத்தில் இருக்கிறது. இரு அணிகளும் வெற்றிக் காக கடுமையாக போராடும் என்பதால் இந்த ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



**வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு**

**யாண்டும் இடும்பை இல**

**விளக்கம்:**

**விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை**

# உங்க சக்தியே ஒண்ணா நின்னு ஜெயிக்கிறது தான் சென்னை மக்களுக்கு ஊக்கமளித்த ஹர்பஜன் சிங்





மிச்சாங் புயல் காரணமாக சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகள் மழை வெள்ளத்தால் சூழ்ந்துள்ளது. இந்த நேரத்தில் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து மீட்புப் பணியில் ஈடுபடுவதுதான் உடனடி தீர்வுக்கு முக்கிய காரணம். இதை வலியுறுத்தி முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் தனது எக்ஸ் பக்கத்தில் செய்தி ஒன்று வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் " " எனப்பதிவிட்டுள்ளார். ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடிய ஹர்பஜன் சிங் தமிழ் மக்கள் பாசத்தால் ஈர்க்கப்பட்டுள்ளார். இதனால் அடிக்கடி தமிழில் டுவீட் செய்வது வழக்கம். தற்போது சென்னை மக்கள் வெள்ளத்தில் சிக்கி தவிக்கும் நிலையில், மக்களுக்கு ஆதரவாக பதிவு செய்துள்ளார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.